# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## O.S. No.380 / 2023

## Dated:22.06.2026

Name : குருசாமி (DW1)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது மனைவி மங்குத்தாயம்மாள் 19.01.1998ம் தேதி சர்வே எண்.177-2ஏ யில் சென்டு 75யை பதிவு கிரையமாக வாதி இந்திராவுக்கு விற்பனை செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்கமூலத்திலும் எனது மனைவி மேற்படி 75 சென்டை வாதிக்கு விற்பனை செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 75 சென்டை வாதி தான் பத்திரப்படி அனுபவம் செய்து வருகிறார் என்றால் இதுவரை வாதி அந்த இடத்தின் அருகில் வந்தது கூட இல்லை, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். மேற்படி விற்பனை செய்த சொத்து சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.177-2ஏ1, சர்வே எண்.177-2ஏ2 என்று உட்பிரிவாகியுள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.177-2ஏ1 யில் வாதியின் பெயரும் சேர்த்தும், மற்ற உரிமையாளர்கள் பெயரையும் சேர்த்தும் கூட்டுப்பட்டா ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயர் மற்றும் புகைப்படத்துடன் கூடிய பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவி வாதிக்கு விற்பனை செய்துவிட்டு கூடுதல் பணம் கேட்டு, வாதி கொடுக்க மறுத்ததால் தான் வழக்கு சொத்தில் அவரது அனுபவத்தை தடுத்தோம் என்றால் சரியல்ல. வாதி அனுபவத்திற்கே வரவில்லை. வழக்கிற்காக தடுக்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.280-2004ல் விருமாண்டி இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்தது தெரியும். அந்த வழக்கு தள்ளுபடி ஆனது. அந்த வழக்கில் வாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாதி 19.01.1998ம் தேதி என் மனைவி மங்குத்தாயம்மாளிடம் சென்டு 75யை பதிவு கிரையமாக வாங்கி அவரது பெயரில் பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்று எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்சமயம் உண்மைக்கு புறம்பாக வழக்கு

சொத்தினை வாதி அனுபவம் செய்யவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.22 06:18:00 +0530

Sub Judge,
Usilampatti.